Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா; 4:50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 மார்ச் (30 - 03 - 1991) சனிக்கிழமை ஓசை: 40

## கிராம சேவகரைத் தேடி மக்கள் அலைச்சல்

(கொழும்புத்துறை)

நெடுங்குளம் கிராமசேவையாளர் ஜே/61 பிரிவில் கடமையாற்றிய கிராமசேவையாளர் சுய விருப்பத்தின் பெயரில் இளைப்பாறியுள்ளார். இவரது இடத்துக்கு தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட கிராம சேவையாளரிடம் மக்கள் சென்றால் அவர் தான் இல்லையெனப் பதில் கூறுகிறார். இந்தப் பகுதிக்கு இதுவரை நிரந்தரமாக (4ஆம் பக்கம் பார்க்க)

# தாண்டிக்குளம் இராணுவ முகாம் காவலரண் மீது புலிகள் கடும் தாக்குதல்

## பல இராணுவத்தினர் பலி; 7 புலிகள் வீரமரணம்

[வவுனியா]

வவுனியா கண்டிவீதியில் உள்ள தாண்டிக்குளம் இராணுவ முகாமிற்கு அருகே இருந்த இராணுவ காவலரண்மீது நேற்று முன்தினம் இரவு புலிகள் மேற்கொண்ட கடுமையான தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏழு புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

இந்தத் திடீர்த் தாக்குதல் சம்பவம் குறித்து எமக்குக் கிடைத்த மேலதிக தகவலின்படி நேற்றிரவு ஒன்பது மணி தொடக்கம் நள்ளிரவு பன்னிரண்டு மணிவரையும் இந்தத் தாக்குதல்கள் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்டன.

தாண்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து நானூறு யார் தொலைவில் உள்ள ஒரு காவலரண் புலிகளின் தாக்குதலுக்குள்ளானது.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து மூன்று இராணுவத்தினரின் உடல்களை அங்கு கண்டதாக நேற்றுப்புலிகளின் குரல் வானொலியில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஒரு ரீ-81 ரக துப்பாக்கி புலி (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் யாழ் வாசிகள் திருட்டு

(சென்னை)

தமிழ் நாட்டில் கிறீன் வேல்ஸ் வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு பெண் மணியிடம் அவர் அணிந்து கொண்டு சென்ற சங்கிலியை இரு இளைஞர்கள் பறித்தெ (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் சூட்டிற்கு ஒருபெண்பலி; ஒருவர்காயம்

(செ. த. மை.)

கீரிமலைப்பகுதியில் இருந்த இராணுவத்தினர் நேற்றுக் காலை 10 பத்துமணியளவில் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் வன்னியசிங்கம் சிவமணி (வயது 26) என்பவர் பலியானார்.

அம்பனையைச் சேர்ந்த இவர் அளவெட்டிப் பகுதியிலுள்ள தையல் நிலையமொன்றில் வேலை செய்துகொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானார்.

விழிசிட்டிப் பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த பொற்கொடி என்னும் பெண்ணும் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தார்.

## இரண்டாவது நாளாகவும் கீரிமலையில் கடும் மோதல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்றும் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் கடுமையான யுத்தம் நடைபெற்று வருகிறது.

தெல்லிப்பளை, இளவாலை வினான், கொல்லங்கலட்டி, ஏழாலை போன்ற இடங்களை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல்களினால் இந்த கிராமங்களில் உள்ள வீடுகள் பல சேதமடைந்துள்ளன. கடுமையான வெடிச்சத்தத்தால் அப்பகுதிகள் காலையிலிருந்து மாலைவரை அதிர்ந்த வண் (4ஆம் பக்கம் பார்க்க)

## விளா வெட்டுவானை சுற்றிவளைத்த இராணுவம் புலிகள் மோதல்

(மட்டக்களப்பு)

விளாவெட்டுவான் மற்றும் சிறுவாமுனைக் கிராமங்களை இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் ஹெலிகொப்டர் உதவியுடன் சுற்றி வளைத்த போது விடுதலைப்புலிகள் சண்டையிட நேர்ந்தது இம் மோதலில் புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்துள்ளார், இராணுவத்தினர் திரும்புகையில் திரு கிருஷ்ணபிள்ளை என்பவரின் வீட்டை எரித்ததுடன், விளாவெட்டுவான் உப தபால் அதிபர் சண்முகராஜா என்பவரையும், ஆரையம்பதியைச் சேர்ந்த சிவனேசன் என்பவரையும் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

## பெண் கொலை; கொள்ளை; இருவருக்கு மரணதண்டனை

(செ. த. மை)

ஒரு பெண்மணிக்கு மின்சாரம் பாய்ச்சி, அவரைக் கொலை செய்துவிட்டு, வீட்டிலிருந்த பல பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்த குற்றத்துக்காக, இருவருக்கு விடுதலைப் புலிகள் நேற்றுமரணதண்டனை நிறைவேற்றினர்.

நல்லூர் கோவில் வீதியைச் (4ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால ஒழுங்கு விதிகள் சிறிலங்காவால் தளர்வு

(கொழும்பு)

சிறிலங்காவின் அவசரகால ஒழுங்குவிதிகள் சில நேற்று நள்ளிரவுமுதல் நீக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மே மாதம் பதினோராம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை முன்னிட்டு மேற்படி முடிவினை ஜனாதிபதி எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்வலங்களையும், பொதுக் கூட்டங்களையும் ஒழுங்கு செய்வதற்கு இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டபோதிலும், பிடியாணை இல்லாமல் ஆட்களை அதிகாரம் படைத்தவர்கள் கைது செய்வதை தடுக்கும் சட்டம் மே மாதம் 4ஆம் திகதிக்குப் பின்னரே அமுலுக்கு வரும்.

## வீரவணக்கம்

### 'கசின்' 'விசு'

யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் கசின் (கந்தசாமி சிவகுமார் வட்டுக்கோட்டை) என்னு வீரவேங்கை வீரமரணமடைந்தார் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளனர்

மட்டக்களப்பு விளாவெட்டுவான் கிராமத்தை சுற்றி வளைத்த ரெலோ குழுவினருடன் வந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில்விசு (கெனடிராஜன் அலிஸ்டன் ராஜன்) ஜெயந்திபுரம், மட்டக்களப்பு என்னும் வீர வேங்கை வீரமரணமடைந்தார். இவருக்குதமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## தாண்டிக்குளம் மோதலில் ஏழு புலிகள் வீரமரணம்

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் முகாமிற்கு அருகே நடந்த மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப்புலிகளின் விபரம் வருமாறு:

- ★ லெப். துஷ்யந்தன் (பொன்னையா தவபாலன் பூந்தோட்டம், வவுனியா)
- ★ மேஜர் லெப். அலெக்ஸ் (சோமசுந்தரம் தவபால சுந்தரம் இராசேந்திரகுளம், வவுனியா)
- ★ வள்ளல் (குமரச்சந்திரன் குமரபுரம், கிளிநொச்சி)
- ★ பெனா (மகாலிங்கம் முத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி முத்தமிழ் விழா துரித கெதியில் ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

திட்டமிட்டபடி முத்தமிழ் விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. ஏப்ரல் 6ஆம் திகதி ஆரம்பமாகும் முத்தமிழ் விழா 15ஆம் திகதி வரை பல்வேறு இடங்களிலும், பல்வேறு அரங்குகளிலும் கொண்டாடப்படும்.

6-ம் 7-ம் திகதிகளில் மானிப்பாயிலும், 8-ம் 9-ம் திகதிகளில் புங்குடுதீவிலும், 10-ம் 11-ம் திகதிகளில் சாவகச்சே (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட தமிழ்ப் பெற்றோர்கள் கொழும்பு அதிகாரிகளுக்கு நன்றிக் கடன் உடையவர்கள்

### — சந்திரலிங்கம்

(நல்லூர்)

வடபகுதியில் இடம்பெறும் யுத்தத்தின் மத்தியிலும் தமிழ்ச் சிறார்களின் கல்வித்தரத்தை இன்றித் தொடரும் வகையில் அரசாங்கம் பிரயாசைப்பட்டு இலவச பாடப்புத்தகங்களை அனுப்பி உதவியுள்ளது.

காலையிலும், மாலையிலும் நீங்கள் பூஜை செய்யும்போது பூஜையறையில் இலவச பாடநூல்களைக் கடவுளுக்கு நிவேதனம் செய்யும்படி வேண்டுகிறேன். நூல்கள் உங்களுக்கு இறைவனால் வழங்கப்பட்டவையாகும். இறைவனுக்கு திருப்தியளிக்கும் வகையில் நீங்கள் நூல்களைப் பாவித்தால், அதன் விளைவாக நீங்கள் பலனை அறுவடை செய்வீர்கள். நூல் (4ஆம் பக்கம் பார்க்க)

முத்தமிழ் விழா ஏப்ரல் 6 முதல் 15 வரை

வரி விளம்பரம்

## தேவை

மாலித்த சம்போ, ஒடிக்க லோஷன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போக் பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்; எஸ். சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப் பாணம்; (B. 2169)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைப் பகுதியில் நெருப்புக்காய்ச்சல் தடை சம்பந்தமாக ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர் வரும் ஏப்ரல் 2-ந் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 30 மணியளவில் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்:

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், சுகாதாரபோதனாசிரியர் உட்படப் பலர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

இதே வேளை யாழ் குடா நாட்டில் பரவி வரும் நெருப்புக் காய்ச்சல் தடை தொடர்பாக யாழ் மாநகரசபை சுகாதார உத்தியோகத்தர்கள் பாடசாலைகள் தோறும் மாணவர்கள் மத்தியில் சொற்பொழிவாற்றி வருவது குறிப்பிடத்தக்கது;

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய தொழிற்சங்கங்களின் முன்னோடியும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவருமாகிய அமரர் டி. எஸ். சேனாதிராஜா அவர்களின் நினைவுப் பேருரை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் திரு. து. மகாசிவம் அவர்களின் தலைமையில் நடைபெறும்;

(நல்லூர்)

ஈழகேசரி நா. பொன்னையாவின் நாற்பதாவது நினைவு தினம் நாளை ஞாயிறு காலை 9 மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது பிரதம கல்வி அதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை மேற்படி நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவார்.

## வீர வணக்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் தச்சன் தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

கைதடி - நாவற்குழி வட்டப்பொறுப்பாளர்

**கப்டன் அப்பன்**

( ஆறுமுகம் ஸ்ரீதரன்)

என்றும் மறவா
அரியாலை வாழ்
மக்கள்

நிர்வாகம்
ராஜா பிரபு தொழிற் சாலை
286, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்;

39, அமலன் வீதி,
(மலர் மகள் வீதி)
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(R-1223)

## வேலை வாய்ப்பு

### செய்தித்தகவல் மையம்

(கோப்பாய்)

தமிழில் நன்கு எழுதக்கூடிய குறித்த ஒரு விடயத்தை சுருக்கி எழுதும் திறனுடைய க. பொ. த உயர்தரம் படித்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் விண்ணப்பங்கள் யாவும் நேரிலோ அல்லது தபால் மூலமோ 2 . 04 . 91 க்கு முன்னர் "நிர்வாகி", செய்தித் தகவல் மையம்- கோப்பாய்' என்ற விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப மேலுறையின் இடது பக்க மூலையில் " வேலை வாய்ப்புக்கான விண்ணப்பம் " என எழுத வேண்டும். நேர்முகப்பரீட்சை 05. 04. 91 இல் நடைபெறும். நேர்முகப்பரீட்சையின் போது வயது, கல்வித்தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் குறிக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் (கிராமசேவை அலுவலர்) சமர்ப்பிக்க வேண்டும்; மாவீரர் குடும்பத்தினராயின் தமது பகுதியிலுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதேசப் பொறுப்பாளரின் சிபார்சுக் கடிதமும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்தினராயின் கிராம சேவை அலுவலரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதமும் மேற்குறிப்பிட்ட பத்திரங்களோடு சமர்ப்பிக்க வேண்டும்; விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தினால் தமிழில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்; வேதனம் வழங்கப்படும்.

- "நிர்வாகி"
(செ. த. மை)

(B- 2210)

## மழலை புகைப்பட நிலையம்

முத்தமிழ் விழாவை முன்னிட்டு இதுவரை காலமும் 'பேபி போட்டோ' என்ற பெயரில் இயங்கி வந்த எமது புகைப்பட நிலையம் தற்போது தமிழில் மாற்றப்பட்டு

**மழலை புகைப்பட நிலையம்**

என இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்;

உங்கள் மழலைச் செல்வங்களின் உயிரோவியமான படங்களுக்கு

மழலை புகைப்பட நிலையம்
பல்கலைக்கழக சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(R-1211)

## படமாடம்

உங்களுக்குத் தேவையான படவகைகளைப் பெற்றுக்கொள்ளவும், படங்களுக்குச் சட்டமிடவும், கண்ணாடி வகைகளை விரும்பிய அளவில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கும் யாழ்நகரில் நீங்கள் நாட வேண்டிய முன்னணி நிலையம்;

படமாடம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கருகாமையில்) (B-2172)

## A L 91 DAY CLASSES

ஆரம்பம்: 05-04-1991 (காலை 8 மணி)

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(B-2216)

## A/L 90 விஞ்ஞான பாடங்கள் முன்மாதிரி பயிற்சிப் பரீட்சையும் இலவச கருத்தரங்கும்

பிரவேசம்: எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 02-04-1991 | செவ்வாய் | 9-00 | இரசாயனவியல் | I |
| 03-04-1991 | புதன் | 9-00 | பௌதிகவியல் | I |
| 04-04-1991 | வியாழன் | 9-00 | விலங்கியல் | I |
| 05 04-1991 | வெள்ளி | 9-00 | தாவரவியல் | I |

★ கால அவகாசம் போதாமையினால் மேற்படி பாடங்களின் பகுதி - IIஐ, தூய, பிரயோக கணிதமும் பரீட்சையாக நடாத்த முடியாமைக்கு வருந்துகிறோம்; அனைத்து விஞ்ஞான பாடங்களினதும் (தூய, பிரயோக கணிதம் உட்பட) பகுதி I & II இற்கான மாதிரி வினாத்தாள்களுடன் கருத்தரங்கு இலவசமாக நடாத்தப்படும். பரீட்சையில் கலந்துகொள்ள முடியாதவர்களும் கருத்தரங்கில் கலந்துகொள்ளலாம்.

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்;

(B-2219)

★ உங்களுக்குத் தேவையான புகைப்படங்கள்
★ றபர் சீல்
★ HALFTONE - LINE கலர் புளொக்ஸ் (Blocks)
★ கலர் பிலிம் கழுவுதல்
★ ஓவிய வேலைகள்
★ கலர் பிலிம் சுருள்களை படமாக்குதல் பெருப்பித்தல்
★ பிறேம் போடுதல்
★ ஸ்ரிக்கேஸ் தயாரிப்பாளர்கள்

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்
(B-2091) 265, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்;

## நினைவு கூருகின்றோம்



### மார்ச் 30

மணிவண்ணன்
(கா. ஜெயசீலன்
மட்டக்களப்பு)

1986 ஆம் ஆண்டு பாந்தனில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

**2-ம் லெப். நிமால்** (பேர்னான்டோ றோமன் சுரேஸ்குமார், திருநகர், கிளிநொச்சி)

இதே ஆண்டு கும்புறுப்பிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையிலிருந்து தப்ப குளத்திற்குள் பாய்ந்த போது முதலை கடித்து மரணமடைந்த

**ராஜன்** (பொன்னுத்துரை நடேசலிங்கம் - கும்புறுப்பிட்டி)

1987 ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**ஹிட்லர்** (நடராசா காரைநகர்)

இதே ஆண்டு யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் மரணமடைந்த 9 பொதுமக்கள்

இதே ஆண்டு வீரமரணமடைந்த

❋ **ஜெகன்** (எலியாஸ் குரூஸ் - மன்னார்)

❋ **சங்கர்** (முனியாண்டி காமராஜ் - மன்னார்)

1989 ஆம் ஆண்டு திருக்கோணமடு பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**மணிவண்ணன்** (கா. ஜெயசீலன் மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்;

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2162)

### ❁ சிந்தனைக்கு ❁

உள்ளொன்று வைத்துப் புறமொன்று
பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்.

— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 30-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# மக்களை குழப்பத்திலாழ்த்தும் பத்திரிகைச் செய்திகள்

"இனப்பிரச்சினை தீர்விற்கு சிறிலங்கா அரசு தனியாகத் திட்டங்கள் தயாரிக்கின்றது."

"இனப்பிரச்சினை தீர்விற்கான நகல் திட்டத்தை தரும்படி அரசாங்கம் கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களை வற்புறுத்துகின்றது."

"போர் நிறுத்தம் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தொடர்ந்தும் அழிவுகள் ஏற்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை."

கடந்த ஓரிரு வாரங்களாக பத்திரிகையில் தொடர்ச்சியாகவும் இடைக்கிடையாகவும் செய்திகள் வெளிவந்துமுள்ளன.

இதை உறுதிப்படுத்துமாப்போல் கடந்த இருவாரங்களில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா தொடக்கம் புதிய பாதுகாப்பு இணைஅமைச்சர் டி.பி. விஜேதுங்கா, சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ரணதுங்கா ஆகியோரும் பேச்சுவார்த்தை பற்றி அடிக்கடி பேசி வருகின்றனர்.

இதேவேளை தமிழர் பிரதேசங்களில் நடக்கும் மோதல்களுக்கும், இராணுவத்தினரின் அடாவடித்தனத்திற்கும் காலம் சென்ற பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னாவே முழுப்பொறுப்பும் என்பது போன்றும் அரச சார்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருகின்றன. அரச கட்டுப்பாட்டில் உள்ள "ஏரிக்கரைப் பத்திரிகைகள்" இதனை வலியுறுத்துவது போல் ஆசிரியர் தலையங்கங்களையும் தீட்டியுள்ளன. இதன்மூலம் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கும் அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னாவே முழுப்பொறுப்பும் எனப் பழியை முழுமையாக இறந்த அமைச்சரின் தலையில் போட்டுவிட்டு தப்பிக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இறங்கியுள்ளதுபோல் தெரிகின்றது.

ஆனால், அமைச்சர் ரஞ்சன் இறந்த பின்பும், திட்டமிட்ட இராணுவ நடவடிக்கையில் எந்தவித மாற்றமும் செய்யப்பட்டதாகவோ, தமிழர் மீதான அடக்குமுறையும் குறைந்ததாகவோ இல்லை.

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளவிருந்த இராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்டதற்கு முன்னராகவே நடைபெறத் தொடங்கியுள்ளது.

கிழக்கில் தொடர்ச்சியாக தமிழர் கைது செய்யப்படுவது சித்திரவதை செய்யப்படுதல், படுகொலை செய்யப்படுதல் தொடர்கின்றது.

பொருளாதாரத் தடைகள் தொடர்கின்றன. மீனவர்கள் கடலில் இறங்க முடியாத அளவிற்கு சிறிலங்காகடற்படையினரின் கெடுபிடிகள் நிகழ்கின்றன.

அத்தோடு முஸ்லிம் ஊர்காவற்படைக்கும், தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் அரசாங்கம் கொடுத்துவரும் ஊக்கமும் ஒத்தாசையும் குறையவில்லை. இதனால் படுகொலைகளும் பாலியல் வன்முறைகளும் தொடர்கின்றன.

இவ்வாறான நிலையினை அவதானிக்கும்போது அரசாங்கம் தனது நெருக்கடிகளைத் தணிக்கவும், தேவைகளை நிவர்த்தி செய்யவுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுவதுபோல் காட்டிக்கொள்கின்றதே ஒழிய உண்மையில் அதற்கான முயற்சி எதையும் செய்யவில்லை என்பது தெரியவருகிறது.

தென்னிலங்கையில் அரசாங்கத்திற்கெதிரான போராட்டங்கள் வலுவடைந்துவரும் நிலையிலும், இலங்கையின் பொருளாதாரம் என்றும் இல்லாத அளவிற்கு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையிலும், அரசாங்கம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைச் சமாளிக்கவேசமாதானமுயற்சிகளைமேற்கொள்வதாகக் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றது.

ஆனால், இந்தியாவிற்கான புதிய சிறிலங்கா தூதுவர் அரசாங்கத்தின் உண்மை நிலையை தெளிவாக வெளிக்காட்டியுள்ளார். இரு தினங்களுக்கு முன் சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்த நெவில் கனகரட்னா விடுதலைப் புலிகளைத் தவிர்த்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கத்தினால் முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இதுவே சிறிலங்கா அரசாங்கத்தின் உண்மைச் சொரூபமாகும். இதனைத் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தின் இன்றைய பேச்சுவார்த்தைக்கான அழைப்புக்களும், யுத்தநிறுத்த பேச்சுக்களும் அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு விரோதமாகவுள்ளன. அதில் உண்மைநிலை தெரிவதாக இல்லை. ஆனால் இதனை பத்திரிகைகள் தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ, விரும்பாமலோ பெரிது படுத்தி மக்களைத் தேவையில்லாத குழப்பங்களுக்கு உள்ளாக்குகின்றன. பத்திரிகைகளின் இந்தச் செயற்பாடுகள் சிறிலங்கா அரசாங்கத்தின் தேவையை மறைமுகமாக நிறைவு செய்வதாகவும் உள்ளன.

# காலம் உருவாக்கிய கவிஞன் பாரதிதாசன்

காலம் கவிஞனை உருவாக்குகிறது என்பது பாரதிதாசனைக் கொண்டு ஊர்ஜிதமாகிறது. அன்றைய இந்தியப் பின்னணியில் மட்டும் இவர் ஊறி இருந்தால் பாரதியாரின் பின், திரும்பிப்பாராமல் நடைபோடும் புலவனாக வளர்ந்திருந்தால், பாரதிதாசனின் புலமை விளை முழுதும் நாம் பெற்றுச் சுவைக்க வாய்ப்பு இருந்திருக்காது. ஆரம்பத்தில் ஆன்மீகவழிப் புலவனாக, சந்தைய வழுத்திய இவர் பாடல்கள் பக்திச்சுவை மிக்கவை; பலராலும் பாராட்டப்பட்டவை இவர் பாடல்கள் இவை பாரதியாரின் பாடல்கள் என்றே நம்பப் பட்டுப் பிரசுரமாயின.

கவிஞரின் வளர்ச்சியில், அவர் எதிர்கொண்ட சமய சமுதாயச் சீர்கேடுகள் சிந்திக்கும் நெஞ்சங்களை, அவை ஆஸ்திகமானவையாக இருந்தாயினும் சரி, நாஸ்திகமானவையாக இருந்தாயினும் — சீண்டத்தான் செய்தன. பாவேந்தரின் மனத்தை ஆழமாக உறுத்தின. 'பிறந்தன 'சாட்டைக் கவிதைகள்' சமயத்தின் பேரால், அன்றிருந்த பாமரச் சமுதாயம் சுரண்டப்படுவதை, கவிதை உள்ளம் தாங்கிக் கொள்ள முடியவில்லை அவ்வளவு தான். இவர் கவிதையில் எங்காவது

'தெய்வம் ஒன்று' என்ற அடிப்படையை மறுப்பதாக நான் காணவில்லை. மாறாக அக்கிரமமும் அநியாயமும்காணப் பட்டபோது 'படைத்தவனே நீ பாழாய்ப்போக' என்ற குமுறல் கேட்கிறது. இது எமது பாரம்பரியத்துக்குப் புதிதல்ல



லவே. இரப்போர்நிலை கண்டு சீறிய வள்ளுவனும், பக்தர் ஆற்றாமை கண்டு குமுறிய சுந்தரனும், அண்மையில் பாரதியும் நினைவுக்குவருகிறார்கள்.

பூனைப்புலவன் உள்ளம் "கொடியோர் செயல் அறவே கொலைவாளினை எடடா!" என்று குமுறும்போது படிக்கும் எமதுள்ளமும் நிமிர்ந்து செயற்பட முனைகிறது. சமுதாயச்சீர்திருத்தம் வேண்டும் என்றகுரல் எங்கும் கேட்கிறது. இதனைப்பாவேந்தர் 'மாசற்ற தொண்டிழைப்பீர் சமுதாயச்சீர் மறுமலர்ச்சி கண்டதென முழக்கம் செய்வீர்' என்று மறுமலர்ச்சி நிகழ்ந்து விட்டது என்றுறுதி எக்காளம் செய்கிறார். தமிழனைப் பார்த்து விசையான தமிழ்க் புலவர் கூறுகிறார். 'வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும் விசை ஒடிந்ததேகத்தில் வன்மை வேண்டும்சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத் தொலைவாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும்... மறச் செயல்கள் மிகவும் வேண்டும்'

இக்கருத்துகள் எத்தனை பொருத்தமாக எமக்கு இப்போது அமைகிறது; என்பதை நினைத்தால் பாவேந்தர் செந்நாப்புலவர் காலங்கடந்த கவிஞன் என்பது முடிவு.

பாரதிதாசன் தமிழ்ப்புலவன்; அழியாத கருத்துக்களை அள்ளித் தந்தவனாகையால் உலகப்புலவன் இவனுக்கு விழா எங்கும் வேண்டும். பாவேந்தரைப் பாராட்டி விழா எடுக்கும் ஈழத்தமிழ் பல்கலைக்கழகமும், தமிழ் மன்றமும் வாழ்க தமிழ்போல.

**சிவராம்**

## வட்டுக்கோட்டையில் மாவீரர்களுக்கு அஞ்சலி

மன்னாரில் சிறிலங்கா படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த பொன்னாலையைச் சேர்ந்த போராளியான "மேஜர் செட்டி" எனப்படும் க. செல்வக்குமார், வட்டுக்கோட்டை, சுலைநார் சிவன்கோவிலடியை சேர்ந்த "கலைச்செல்வன்" எனப்படும் கு. மணிவண்ணன் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்து முகமாக நேற்று வட்டுக்கோட்டை பொன்னாலைப் பகுதியில் கடைகள் சந்தைகள் மூடப்பட்டிருந்தன.

இப்பகுதிகளிலுள்ள பல பாடசாலைகளும் மூடப்பட்டு மாணவர்கள் ஆசிரியர்கள் வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். (செ. துரை) (20)

## பரீட்சைகள் பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீதசபை பரீட்சைகள் ஏப்ரல் 16ஆந் திகதிக்கு பின்போடப் பட்டுள்ளது என இச்சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (லோ)

## டினார்களுக்குரிய மிகுதி கொடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க வங்கிகளிலும் வர்த்தக வங்கிகளிலும் விற்ற டினார்களுக்குரிய மிகுதிப் பணத்தை கொடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வளைகுடாப் போருக்கு பின்னர் ஏற்பட்ட குழப்பமான நிலைகளில் குவைத்தியடினார்களுக்கு இருந்த பெறுமதி குறைந்திருந்தது. இதனால் குவைத்தில் இருந்து வந்த இலங்கையர்கள் குறைந்த விலையிலேயே தமது டினார்களை விற்றிருந்தனர்.

மீண்டும் குவைத்தில் அரசாங்கம் உருவாக்கப்பட்டதும் டினார்களுக்குரிய பணத்தினை கொடுக்க மத்திய வங்கி முன்வந்துள்ளது. இதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மத்திய வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் குவைத்தில் வங்கிக் கணக்குகள் கடந்த ஞாயிறு முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் 2ஆம் திகதிக்கு முன்னர் குவைத்தில் இருந்து அனுப்பப்பட்ட காசோலை டிராப்டுகளை இலங்கையில் மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு விரைவில் கிடைக்குமென வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மீள் நியமன கடிதங்களை இளைப்பாறிய ஆசிரியர்கள் ஏப். 1ஆம் திகதி பெறலாம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மீளவும் தமது ஆசிரிய பதவியை பெற்றுக் கொண்டதும் ஓய்வூதியமும் வழங்கப்படுவதுடன் இவர்கள் இளைப்பாறும் போது பெற்றுக் கொண்ட சம்பளமும் தொடர்ந்து வழங்கப்படும் என கல்விப் பணிப்பாளர் நேற்று முன் தினம் கூறினார்.

சுற்றுநிருபம் இலக்கம் 44-90 இல் குறிப்பிட்டதற்கு இணங்க இளைப்பாறிய விஞ்ஞான கணித ஆசிரியர்கள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் சேவை ஆற்றுவதற்கு விண்ணப்பித்திருந்தனர். இவ்வாறு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது நியமன கடிதங்களை முதலாம் திகதி காலை கல்வித்திணைக்கள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார். (லோ)

## சோவியத்தில் ஆர்ப்பாட்டம் கட்டுப்படுத்த இராணுவம்

(மாஸ்கோ)

சோவியத் நாடாளுமன்றத்தின் வேண்டுகோளை அதிபர் கொர்பசேவ் புறக்கணித்தார். இதனை ஆட்சேபித்து நடைபெறஇருக்கும் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணிகளைக் கட்டுப்படுத்த ஆயுதப்படையினர் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். சோவியத் அதிபர் கொர்பசேவ் அவர்களுக்கும் ரஷ்யக் குடியரசின் தலைவர் எட்சின் அவர்களுக்குமிடையேயான கனிப்போரின் விளைவே இதுவென பி.பி.ஸி நேற்றிரவு வர்ணித்தது. ஆயுதப்படையினரை வாபஸ் பெறக்கோரிசோவியத் நாடாளுமன்றம் விடுத்த வேண்டுகோளை கொர்பசேவ் புறக்கணித்ததை தொடர்ந்து நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனினும் மாஸ்கோவிலோ அதனைச் சூழவுள்ள பகுதிகளிலோ மூன்று வாரங்களுக்கு ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணிகள் நடத்துவது படையினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

## கண்காட்சி

(செ. துரை)

பாஷையூர் குருசோ வீதியிலுள்ள கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் மாதர் சங்கத்தினரால் தயாரிக்கப்பட்ட உள்ளூர் உற்பத்தி கைப்பணிப் பொருள்களின் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

# தேர்தல் அமைதியாக நடக்க
# துணை இராணுவப் பிரிவு

(சென்னை)

சென்ற இரு மாதங்களில் மட்டும் 120 விடுதலைப் புலிகளும், 118 ஆதரவாளர்களும் 40 தீவிர விடுதலைப் புலிகளும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை துணை அமைச்சர் சுபதகான் சகாய் புதன் கிழமை சென்னையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தேர்தலைத் தமிழகத்தில் அமைதியாகப் பாரபட்சமின்றி நடத்துவதற்கான சூழ்நிலை நிலவுவதாகவும், தமிழக அரசு கோரியுள்ள துணை இராணுவப் படைகள் நிறுத்தி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது காரணமின்றி சிறிலங்கா கடற்படையினர் சுடுவதை அறிந்து கவலை ஏற்பட்டுள்ளதென்றும் சுபதகான் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தொடர்பான ஆவணங்களை வெளியிட அரசு ஏன் தயங்குகிறது என்று செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், அவ்வாறு ஆவணங்கள் வெளியிடப்பட்டால், தேர்தல் நடைபெற இருக்கும் இந்தத் தருணத்தில் சம்பந்தப்பட்ட கட்சிக்கு அது பாதகமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். தமிழக ஆளுநர் பர்னாலா பதவி விலகியது பற்றிக் கேட்கப்பட்டபோது, அவருக்கு பீகாரில் ஆளுநர் பதவி வழங்கப்பட்டதென்றும், அவர் அதை ஏற்காமல் பதவி விலகிவிட்டார் என்றும் சுபாதிகான் தெரிவித்தார்.

ஜனதா தள் (எஸ்) கட்சியை

## தேர்தல் கூட்டிற்கு எவரும் அணுகவில்லை

**—சந்திரசேகர்**

(பம்பாய்)

லோக்சபா தேர்தலில் போட்டியிட தேசிய கூட்டணிக்கு ஜனதாதள் எஸ் கட்சியை எந்தக் கட்சியும் அணுகவில்லை என்றும் ஜனதாதள் எஸ் கட்சியும் வேறு கட்சிகளை இதுவரை அணுகவில்லை என்றும் இந்தியப் பிரதமர் எஸ். சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு மகாராஷ்டிராவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சந்திரசேகர் இதனைத் தெரிவித்தார்.

ஆனால் ஜனதா தள் எஸ், இந்திரா காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உடன்பாடு செய்து கொள்வது குறித்து நேற்று புதுடில்லியில் ஜனதா தள் எஸ் கட்சி ஆலோசனை செய்தது என உத்தரப்பிரதேச முதலமைச்சர் மொலாயம்சிங்யாதவ் தெரிவித்தார்.

இதேவேளை ஜனதாக்கட்சி அடுத்த மாதம் 10 ஆம் திகதியே இந்திரா காங்கிரசுடனோ அல்லது ஜனதாதள் எஸ்சுடனோ கூட்டுச் சேர்வது என்பது பற்றி முடிவு செய்யும் என சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

## இந்தியா தொடர்பான கொள்கையில் மாற்றமில்லை

(வாஷிங்டன்)

இந்தியா பற்றிய அமெரிக்கக் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதுவரோ அல்லது வேறெந்த அமெரிக்க அதிகாரியோ இது பற்றி எது சொன்னாலும், அதிகாரபூர்வமான அமெரிக்காவின் செயல் மாற்றத்தைக் குறிப்பதாக அமையாது என்று வாஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுத் துறை இந்தியத் தூதுவரிடம் தெரிவித்துள்ளது.

---

*பெண் கொலை*

சேர்ந்த குமார்குலசேகரம் (32 வயது), கோப்பாய் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் (55 வயது) ஆகிய இருவருக்குமே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு நல்லூர் பண்டாரக்குளம் வீதியில் வசித்துவந்த துரைஅம்மா என்னும் பெண்மணிக்கு மின்சாரம் பாய்ச்சி கொலை செய்துவிட்டு, பெறுமதியான பொருள்களை, மேற்குறிப்பிட்ட இருவரும் கொள்ளை அடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

*இரண்டாவது*

ணம் இருந்தன.

இதேவேளை மேலும் இளவாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஷெல் தாக்குதல் ஒன்றில் படுகாயமுற்ற எஸ். மரியதாஸ் என்பவர் நேற்றுப் பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலினால் அச்சமடைந்த மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல அஞ்சுகின்றனர். இப்பகுதிப் பாடசாலைகளில் இன்று புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(லோ) (ச)

---

*தமிழகத்தில்*

டுத்துள்ளனர்.

இதே வீதியால் சென்று கொண்டிருந்த பஸ் நடத்துனராகப் பணிபுரியும் மற்றோர் இளைஞர் இவர்களை மடக்கிப் பிடித்ததில் இவர்கள் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைஞர்கள் என்று தெரிய வந்ததாம்.

## புளொட் ரயர் போட்டு எரித்தது

வவுனியா நகரப் பகுதியில் கடந்த சனியன்று புளொட் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மு. சின்னையா 37) மற்றும் நாதன் என்பவர்களது சடலங்களை புளொட் குழுவினர் ரயர்போட்டுக் கொளுத்தி எரித்தனர் என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இறந்தவர்களது சடலங்களை பெறச்சென்ற உறவினர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர்.

(தி)

---

*கிராமசேவகரை*

கிராமசேவையாளர் நியமனம் செய்யப்படவில்லை என மக்கள் கவலைப்படுகின்றனர்.

தினசரி மக்கள் நெடுங்குளம் கிராமசேவையாளர் யார் என சில அத்தியாவசியத் தேவைகளுக்கு கையொப்பம் பெற அலைந்து திரிகின்றார்கள்.

(24)

---

*காவலரண்*

களால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பல இராணுவத்தினர் இத்தாக்குதலில் உயிர் இழந்திருக்கலாம் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, முழுமையான சேதவிபரங்கள் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

இத்தாக்குதலில் முன்னின்று போராடிய ஏழு தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

---

பட்டுள்ளதென்றும் சுபதிகான் தெரிவித்தார்.

*திட்டமிட்டபடி*

ரியிலும், 12-ம் 13-ம் திகதிகளில் நெல்லியடியிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

11ஆம் திகதி சாவகச்சேரியில் மாவீரர் நாளையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும், 13-ம் திகதி நெல்லியடியில் முத்தமிழ் விழா மலர் வெளியீட்டு வைபவமும், 15-ம் திகதி 'தமிழீழ தேசிய விருது' வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. முத்தமிழ் விழாவையொட்டி 6-ம் திகதி முதல் 15-ம் திகதிவரை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஓவியக் கண்காட்சி பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 6-00 மணிவரை இடம் பெறவுள்ளது. 60 அரங்குகளில் நிகழ்ச்சிகள் நடைபெறும் வன்னி, மன்னார் உட்படப் பல இடங்களையும் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

---

*கொழும்பு*

களைத் தவறான வழியில் உபயோகிப்பது தெய்வ நிந்தனையாகும்— இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரியில் யாழ். கொத்தணிப் பாடசாலை அதிபர்களுக்குப் புத்தகங்களைக் கையளிக்கும் வைபவத்தில் பேசும்போது வடபிரதேசக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தியாகராசா வைபவத்துக்குத் தலைமை வகித்தார். மாணவரும், ஆசிரியரும், பெற்றோரும் இலவசப் பாடநூல்களை அனுப்புவதற்குக் கொழும்பில் உதவியவர்களுக்கு நன்றிக் கடனுடையவர்களாக இருக்கவேண்டும் கல்வி அமைச்சும், அரசாங்க வெளியீட்டுப் பகுதி அதிகாரிகளும் அறிவுத்தாகத்துடனிருக்கும் சிறார்களுக்கு உதவுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

---

*தாண்டிக்குளம்*

ராசா நொச்சிக்குளம், வவுனியா)

★ சிறி (சிவலிங்கம் பெருமாள் மகாரம்பைக்குளம், வவுனியா)

★ சுகிர்தன் (சுந்தையா யோகராசா செட்டிகுளம், வவுனியா)

★ வரதன் (சு. சுப்பிரமணியம் சின்னக்குளம், வவுனியா)

# இனத்தின் மீதுள்ள பற்றால் தன் உயிர் விட்ட அன்னை பூபதி

தனது இனத்தின் மேல் கொண்ட பற்றுடனும் தன் உயிரைவிட தனது இனத்தின் இறைமை காக்கப்பட வேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடனும் இந்திய இராணுவத்தின் துப்பாக்கிகளுக்கு எதிரில் நின்று தார்மீக வழியில் போராடினார்.

தன்னுடைய சாத்வீகப் போராட்டம் மூலம் தமிழ் மக்களின் மீதான அடக்குமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் போராடினார். தமிழீழத்தின் பிறப்பில் அன்னை காண்டிருந்த உறுதியை நாம் அனைவரும் பெறவேண்டும் என்று யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியர் சத்தியபாலன் அவர்கள் உரையாற்றுகையில் கூறினார். இக்கூட்டத்தில் பாடசாலை அதிபர், மாணவர் கேசவராஜன் மாணவி ஆகியோரும் உரையாற்றினர்.

## செங்கையாழியானின் 'குவேனி' வெளியீட்டுவிழா

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்த்தாய் பதிப்பகத்தினரால் வெளியிடப்படும் செங்கையாழியானின் 'குவேனி' நூல் வெளியீட்டுவிழா வரும் திங்கட்கிழமை (01-04-91) மாலை 3 30 மணிக்கு திரு. வளவைவளவன் தலைமையில் நடைபெற உள்ளது.

வெளியீட்டுரையை ரவியும், கருத்துரையை பேராசிரியர் கா. சிவத்தம்பியும், கலாநிதி சோ. கிருஷ்ணராசாவும், செய்கின்றனர். முதல் 500 பிரதிகளை சுந்தரம் டிவகலாலா பெற்றுக்கொள்கிறார்.

# ஜனாதிபதிக்கு அறிமுகம்செய்தபோது முகமட்டும், ஹமீத்தும் இருந்தார்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமை தாங்கிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்திற்கு அமியா அழைத்து வரப்பட்டார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஆட்டிக்கல முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச் முகமட் வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீத் உட்பட பலர் அந்தக்கூட்டத்தில் இருந்தனர் என இலங்கை உள்ளடக்கப்பட்ட பிராந்தியங்களுக்கு மொசாட் அமைப்பின் பொறுப்பாளராக இருந்த அமியா எவ்வாறு முன்னாள் ஜனாதிபதிக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். என்ற சட்டத்தரணி பென் இளையதம்பியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் ரவி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

மொசாட் அதிகாரியை ஆக்குதலும் அழித்தலும் என்னும் நூல் தொடர்பான விசாரணையின் போதே ரவி ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் இக் கூட்டத்தில் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு ஆரம்பிக்கப்படுவது குறித்து ஆராயப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமியா இரண்டாம்முறை இலங்கைக்கு விஜயம் செய்தபோது அன்றைய பொலிஸ்மா அதிபர் உருத்திரா இராஜசிங்கம் என்னை அமியாவிற்கு அறிமுகம்செய்து வைத்தார் என ரவி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை

## ஜனாதிபதி ஆட்சியின் பின் கணிசமாகக் குறைந்துள்ளது

**- ப. சிதம்பரம்**

(சென்னை)

"தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி பிறப்பிக்கப்பட்ட பிறகே இலங்கைத் தமிழர்களால் ஏற்படும் பிரச்சினை கணிசமான அளவு குறைந்திருக்கிறது" என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சிதம்பரம் தமிழகப் பொலிசார் எடுத்த கடுமையான நடவடிக்கைகளால் இது சாத்தியமாகியுள்ளது என்றும் இதற்கான பாராட்டுக்கள் மாநில ஆளுநருக்கும், பொலிஸ் பிரிவு தலைவருக்கும் உரித்தாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இராணுவ நடவடிக்கையில் மாற்றம் எதுவும் இல்லை

**-சிறில் ரணதுங்கா**

வடக்குக் கிழக்கில் மூன்று நாட்கள் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டபோதும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது என பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

ஆனாலும் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கு குந்தகம் ஏற்படாது என்றும், பரீட்சார்த்திகளுக்கு இராணுவத்தினர் உதவிகளைச் செய்வர் என்றும் கூறியுள்ளார்.

## திருமலையில் வழங்கப்படும் குடிநீர் அசுத்தமானது

**- டாக்டர் ஞானகுரவன்**

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் அசுத்தமானது என்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. ஞானகுரவன் சுட்டிக்காட்டியுள்ளார். பரிசோதனை முடிவுகளை அடுத்தே வைத்திய அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் மேற்படி அதிகாரி திணைக்கள, கட்டுத்தாபன அதிகாரிகளுடன் ஆலோசனை கலந்தார்.

முறைப்படி வழங்கப்படாமலும், குளோறின் கலக்காமலும் நீர் விநியோகிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.